**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.</u>**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**<u>2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 07–ம் நாள் சனிக்கிழமை</u>**
**<u>IA.05/2025 in O.S.224/2020</u>**

1. சாரதாம்பாள்,
2. ராஜேந்திரன்,
3. சாமிநாதன். ... மனுதாரர்கள்/3 ம் பிரதிவாதி

/எதிர்/

சுந்தராம்பாள் ... எதிர்மனுதாரர்/வாதி

இவ்வழக்கு கடந்த 27.02.2026 தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R. கொளஞ்சிநாதன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சுரேஷ்குமார் அவர்கள் முன்னிலையாகியும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**<u>உத்தரவு</u>**

1. இம்மனுவானது எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாததால் கடந்த 04.02.2025 அன்று ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்ய உத்தரவாக வேண்டுமென்று சி.பி.சி.ஆர்டர் 9 ரூல் 7 படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>3 ம் மனுதாரரின் மனுவின் சுருக்கம் :–</u>**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 3 ம் பிரதிவாதி என்றும், மற்ற இதர பிரதிவாதிகளுக்காகவும் மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரர் பேரிலும் இதர நபர்கள் பேரிலும் மேற்படி எதிர்மனுதாரர் உரிமை விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தொடர்ந்துள்ளார் என்றும், மேற்படி வழக்கில்

மனுதாரர் தரப்பில் எதிர்வழக்குரையும் தாக்கல் செய்துள்ளேன் என்றும், எதிர்மனுதாரரை மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டி கடந்த 04.02.2025 அன்று வாய்தா இருந்ததாகவும், அன்று மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவில்லை என்று மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டுள்ளதாக மனுதாரர் வழக்கறிஞர் மூலம் தெரிந்துக்கொண்டேன் என்றும், மனுதாரருக்கு சொந்தமான நிலத்தில் நெல், மற்றும் கடலை பயிர் செய்துள்ளேன் என்றும், அதற்கு மருந்து அடித்துக்கொண்டிருந்த காரணத்தினால் தான் மனுதாரர் அன்றைய தினம் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகவோ, மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யவோ முடியாத சூல்நிலை ஏற்பட்டுவிட்டது என்றும், மனுதாரருக்கு மேற்படி நல்ல கட்சி உள்ளது என்றும், ஆகவே கடந்த 04.02.2025 அன்று ஏற்பட்ட ஒருதலைபட்ச உத்தரவினை ரத்து செய்து உத்தரவாக வேண்டுமென்று குறிப்பிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையின் சுருக்கம்</u>

3. மனுதாரரின் மனு அபிடவிட்டில் கூறியுள்ள சங்கதிகள் யாவும் உண்மையல்ல என்றும், எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யாமல் கடந்த 04.02.2025 ல் ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டது என்றும், அதனை ரத்து செய்ய உடன் காலத்தில் இம்மனுவினை தாக்கல் செய்யவில்லை என்றும், குறுக்கு விசாரணை செய்ய மனுதாரருக்கு கால அவகாசம் இருந்தும் மனுதாரர் தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் தான் ஒருதலைபட்ச உத்தரவு ஏற்பட்டது என்றும், அதன்பின்னர் பல வாய்தா கழித்து காலம் தாழ்த்தி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதற்கான முறையான காரணம் எதுவும் மனு அபிடவிட்டில் குறிப்பிடவில்லை என்றும், ஆகவே மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய உத்தரவாக வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்படவில்லை. வாய்மொழி சாட்சியம் கொடுக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**பிரச்சனைக்கான தீர்வு:–**

6. மனுதாரர் தனது மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்று மனு தாக்கல் செய்துள்ளார். எதிர்மனுதாரர் தனது எதிருரை சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

7. மனு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில் அசல் வழக்கில் கடந்த 26.07.2024 அன்று எழுவினாக்கள் வனையப்பட்டு பின்பு 09.09.2024 அன்று வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரணைக்கு உட்படுத்தி ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்து பார்க்கையில் வா.சா.1 குறுக்குவிசாரணைக்காக பல வாய்தாக்கள் வழங்கப்பட்டபோதிலும் 3ம் பிரதிவாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாததால், கடந்த 04.02.2025 அன்று 3ம் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளதை பார்க்கையில் பிரதிவாதி அசல் வழக்கில் கலந்துகொண்டு வழக்கை மேல்நடத்த முன்வருவதாக இந்நீதிமன்றம் கருதுகிறது.

8. மேற்படி அதனை பார்க்கும் போது மனுதாரரின் மனுவினை அனுமதித்து இருதரப்பிலும் விசாரணை செய்யப்பட்டு அதன் மூலம் பிறப்பிக்கப்படும் தீர்வு என்பது ஒரு அறுதியிட்ட தீர்வாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுவதாலும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதாலும் தரப்பினர்களுக்கு அவரவர் தரப்பு கட்சியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது என்பதாலும், அப்பொழுதுதான் வழக்கின்

உண்மை தன்மையை காண்பதற்கும், வழக்கின் தீர்க்கமான முடிவு ஏற்படுவதற்கும், பல வழக்குகள் ஏற்படும் நிலையை தடுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9. மேற்படி மனுதாரரின் மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு போக்குவரத்து மற்றும் இதர செலவீனங்கள் ஏற்படக் கூடும் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் கொண்டு, செலவுத்தொகையுடன் இம்மனுவை அனுமதிக்கப்படுவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

10. எனவே முடிவாக, மனுதாரர் எதிர்மனுதாரருக்கு **ரூ.1,000/-**யை வரும் **26.03.2026**ம் தேதியன்று அல்லது அதற்கு முன்போ செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

வாய்தா அழைக்க.**27.03.2026**

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு மார்ச் திங்கள் 07-ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:**

- இல்லை -

M S KANNADHASAN Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.